


நானூறு பையன்களைப் புதிதாகப் படையில் சேர்த்தார்கள். அத்தனை பேரும் பதினெட்டுக்கும் இருபத்தைந்துக்கும் இடைப்பட்ட வயதுக்காரர்கள். யார் பெத்த பிள்ளைகளோ. துப்பாக்கிச் சனியனைத் தூக்கித் தோளில் மாட்டிவிட்டு, போய்வா என்று ரெட் சல்யூட் அடித்துவிட்டார்கள். போர்ப் பயிற்சி முடிந்ததும் அவர்களுக்கு சித்தாந்தப் பயிற்சிகள் நடத்தப்பட்டன. இ.டி.ஏ. எப்போதும் இந்த ரகப் பயிற்சிகளை பிரான்ஸில்தான் வைத்துக் கொள்ளும். ஆனால், இம்முறை பிரான்ஸில் அவர்களால் ஒதுங்க முடியாமல் போய்விட்டது. செப்டெம்பர் 11 சம்பவத்துக்குப் பிறகு, பூமிப்பந்தில் இருக்கிற அத்தனை தேசங்களுமே தீவிரவாத இயக்கங்களைப் போஷிக்கிற விஷயத்தில் மிகவும் பயந்தன. கொள்கையளவில் ஆதரவு, கோட்பாட்டளவு ஆதரவு, பண உதவி ஆதரவு, படைபல ஆதரவு, எதிர்க்காத அளவுக்கு 'நடுநிலை' ஆதரவு என்று பலதரப்பட்ட விதங்களில் அளித்து வந்த ஆதரவுகளை அப்படி அப்படியே முடக்கிக் கடாசிவிட்டு, இயக்கங்களுக்காக அதுநாள் வரை தெரிந்தும் தெரியாமலும் திறந்து வைத்த கதவுகளை இழுத்துச் சாத்தித் தாழ்ப்பாள் போட்டுக்கொண்டன.

எனவே, தனது புதிய வீரர்களுக்கு இ.டி.ஏ. பாஸ்க் மாகாணத்துக்குள்ளேயே சித்தாந்த வகுப்புகள் நடத்த வேண்டியதானது. நானூறு பேரையும் நாற்பது தனித்தனிக் குழுக்களாகப் பிரித்து, ஆங்காங்கே அகப்பட்ட ஹோட்டல்களில் ரூம் எடுத்து வகுப்பு நடத்தினார்கள். எதற்காகப் போரிடுகிறோம்? ஏன் வேண்டும் தனி தேசம்? என்ன தடை? யார் தடை? நம் பலம் என்ன? எதிரியின் பலம் என்ன? இதுவரை நாம் என்ன சாதித்திருக்கிறோம்? எத்தனை முறை சறுக்கியிருக்கிறோம்? லட்சியத்தில் கடந்து வந்துள்ள தூரம் எத்தனை கிலோ மீட்டர்? இனி ஒவ்வொருவரும் போகவேண்டிய தூரம் எவ்வளவு? அதற்கு என்ன தேவை?

ஒன்று சொல்லவேண்டும். இ.டி.ஏ.வில் வீரர்களைக் காட்டிலும் வலுமிக்க சித்தாந்த புருஷர்கள் உண்டு. ஆக்ரோஷமாகப் பேசக்கூடிய பேச்சாளர்கள். மென்மையாகப் பேசியும் மூளைச் சலவை செய்யக்கூடியவர்கள். இதமான ப்ரொஃபசர்கள் மாதிரி மாணவர்களின் தோளில் கைபோட்டு அவர்கள் பேசுவார்கள். மணிக்கணக்கில், நாள் கணக்கிலும் பேசுவார்கள். காரியம் கைகூடும்வரை அவர்களது பிரசங்கம் நிற்காது. ஓயாது.

அல் காயிதா தொடங்கி எத்தனையோ பல இயக்கங்களில் ஆர்வமுடன் சேரவந்துவிட்டுப் பாதியில் கழன்றுகொண்ட இளைஞர்கள் அதிகம். ஆனால், இ.டி.ஏ.வில் இணைய வந்துவிட்டுத் திரும்பிப் போனவர்கள் என்று ஒருவரும் கிடையாது. இது சரித்திரம். இதற்கு முக்கியமான காரணம் ஒன்று உண்டு.

இ.டி.ஏ. ஓரளவாவது கல்வியறிவு கொண்டவர்களை மட்டுமே குறிவைக்கிறது. மார்க்சியம் புரியவேண்டு மென்பது அவர்களது முதல் எதிர்பார்ப்பு. 'வெத்துக்குத் துப்பாக்கி தூக்குகிறவர்கள் இல்லை நாங்கள். அரை பிளேடு கிரிமினல்களுடன் எங்களைச் சேர்க்காதீர்கள். நாங்கள்

சித்தாந்தத்தால் உந்தப்பட்டு செயல்படுகிறவர்கள். இழந்தவை அதிகம். வலிகள் மிகுதி. வேதனைகள் சொல்லத் தரமற்றவை. இன்றுவரை போராட்டம் தொடர்கிறது; தொடர்ந்து எடுத்துச் செல்ல இளைஞர்கள் கிடைக்கிறார்கள் என்றால், எங்கள் கோரிக்கையின் வலிமை என்னவாக இருக்கும் என்று சற்று யோசித்துப் பாருங்கள். அதன் நியாயத்தைச் சற்று சிந்தித்துப் பாருங்கள். எந்த வகையிலும் ஸ்பெயின் மக்களுடன் எங்களை அடையாளப்படுத்திக் கொள்ளவே முடியாது. மொழி முதல் கலாசாரம் வரை அனைத்துமே வேறு வேறு. தண்டத்துக்கு நாங்கள் அங்கே தண்டனிட்டுக் கொண்டிருக்க வேண்டியிருக்கிறது.'

இ.டி.ஏ.வின் ஓர் அறிக்கையில் இவ்வாறு எழுதப்பட்டிருக்கிறது. இந்த மென்மை எல்லா அறிக்கைகளிலும் இருக்கும்

என்று எண்ணிவிட வேண்டாம். 'சோமாறி டேய்' என்று தொடங்கி மிரட்டும் அறிக்கைகளும் மிகுதி. ஒவ்வொரு தாக்குதலுக்கும் முன்னால், மக்களுக்கு எச்சரிக்கை விடுத்துவிடவேண்டும் என்பதிலிருந்து உறுதியான கொள்கைகள் பலவற்றைத் தன்வசம் வைத்திருக்கிற இயக்கம் அது. இதனாலேயேகூட தோல்விகளைத் தவிர்க்க முடியாமல் போய்விடுவதாகப் புலம்பும் ஆதரவாளர்கள் உண்டு. ஆனால், இ.டி.ஏ. தன்னை மாற்றிக்கொள்ள ஒருபோதும் விரும்பியதே இல்லை.

2004-க்குப் பிறகு சிலிர்த்துக்கொண்டு எழுந்து இ.டி.ஏ. நிகழ்த்திய பல்வேறு குண்டுவெடிப்புகளைப் பட்டியலிட்டால் பக்கம் காணாது. ஆனால், எது ஒன்றுமே அவர்கள் எதிர்பார்த்த கோர விளைவுகளைத் தரவில்லை. கண்டிப்பாகத் தங்களுக்கு ஓர் ஆத்ம பரிசோதனை அவசியம் என்று தோன்றிவிட்டது. கொஞ்சநாள் பேசாதிருந்தார்கள்.

மார்ச் 26, 2006-ம் ஆண்டு Euskal IrratiTelebista என்கிற பாஸ்க் தொலைக்காட்சி நிலையத்துக்கு இ.டி.ஏ.விடமிருந்து ஒரு டி.வி.டி. வந்தது. காரா, பெரியா என்கிற இரண்டு பத்திரிகை அலுவலகங்களுக்கும் அதே டி.வி.டி.யின் பிரதிகள் அனுப்பப்பட்டன. இ.டி.ஏ. தன் சரித்திரத்தில் முதல்முறையாக போர் நிறுத்தம் என்கிற பதத்தை அதில் பிரயோகித்திருந்தது.

'ஆம். நாங்கள் போரை நிறுத்திவிட்டுப் பேச்சுவார்த்தைகளில் பங்குகொள்ள விரும்புகிறோம். ஸ்பெயின் அரசாங்கம் ஒத்துழைக்க வேண்டும். எங்களுக்காக உங்கள் இரண்டு காதுகளில் ஒன்றைக் கொடுங்கள்.'

நிபந்தனையற்ற போர் நிறுத்தம். யாருமே எதிர்பார்க்கவில்லை. 22-ம் தேதி அந்த டி.வி.டி. ஒளிபரப்பப்பட்டு ஸ்பெயின் முழுவதும் மறுநாள் அதே பேச்சாக இருந்தபோது, சொன்னபடி 24-ம் தேதி முதல் இ.டி.ஏ. தன் போர் நிறுத்த விரதத்தைத் தொடங்கியது.

ஆனால், அவர்கள் எதிர்பார்த்தபடி ஸ்பெயின் அரசியல்வாதிகள் ஒத்துழைக்கவில்லை. பேச்சுவார்த்தைக்கு ஆதரவு தெரிவிக்கலாம் என்று சொன்ன பிரதமரைக் கிண்டலடித்தார்கள். ஆளுங்கட்சிக்குப் பல தரப்பிலிருந்து எதிர்ப்புகள் முளைத்தன. மக்களே ஓட்டை மாற்றிப் போட்டுவிடுவோம் என்று அச்சுறுத்தத் தொடங்கினார்கள்.

இ.டி.ஏ. கடுப்பானது. உங்களைத் திருத்தவே முடியாதா என்று ஏக்கமுடன் கேட்டது. 'ம்ஹூம், முடியாது' என்று சொன்னார்கள். ஆனால், ஸ்பெயினின் பிரதமர் ஜோஸ் லூயி ஜபாடரோ (Jose Luis Rodriguez Zapatero) அமைதி, அமைதி என்று ஓயாமல் கத்திக்கொண்டே இருந்தார். எல்லாம் சரியாகிவிடும். எல்லாவற்றையும் சரி செய்துவிடலாம். அமைதி முயற்சியில் யாரும் நம்பிக்கை இழக்க வேண்டாம். என் அமைச்சரவை சகாக்கள் தொடர்ந்து இ.டி.ஏ.வின் பிரதிநிதிகளுடன் பேச்சுவார்த்தை நிகழ்த்துவார்கள். யாரும் சந்தேகப்பட வேண்டாம். எது பற்றியும் அச்சப்பட வேண்டாம்.

பேச்சுவார்த்தை நடக்கத்தான் செய்தது. ஸ்பெயின் அரசுப் பிரதிநிதிகள் பாஸ்க் மாகாணத்திலேயே இடம் பிடித்து வந்து பேச உட்கார்ந்தார்கள். பதில் மரியாதையாக அடுத்த ரவுண்டுக்கு இ.டி.ஏ.வின் பிரதிநிதிகள் (கவனமாக உறுப்பினர்களைத் தவிர்த்து, பாஸ்க் பிரதேசத்து மக்கள் பிரதிநிதிகளைத் தம் கருத்துக்களை எடுத்துச் சொல்லுமாறு அனுப்பியது இ.டி.ஏ.) மாட்ரிடுக்குப் போய் வந்தார்கள். விருந்து உபசாரங்கள், கேளிக்கைகள் எதிலும் யாரும் எந்தக் குறையும் வைக்கவில்லை. ஆனால் கோரிக்கைகள்?

அது கவனமாக குப்பைக்கூடைக்குள் தான் ஒவ்வொரு முறையும் போடப்பட்டது. பாஸ்கைப் பிரிப்பது என்பதில் ஸ்பெயின் அரசாங்கத்துக்கு உடன்பாடு கிடையாது. இப்போது என்றில்லை. எப்போதுமே. ஆனால், அளிக்கப்பட்டிருக்கும் தன்னாட்சி அதிகாரங்களிலேயே இன்னும் கொஞ்சம் சேர்த்துத் தரத் தயார் என்று அவர்கள் சொன்னார்கள். இன்னும் கொஞ்சம் பேரம் பேசினால், இ.டி.ஏ.வையே ஆட்சியமைக்கச் சொல்லக்கூடிய வரைக்கும் கூட இறங்கிவரத் தயாராகவே இருந்தார்கள்.

ஆனால், இ.டி.ஏ. கேட்டது, அதுவல்ல. முழு பாஸ்க். தனி பாஸ்க். சுதந்திர பாஸ்க். ஸ்பெயினுக்கும் தனக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை அண்டை தேசம் என்பது தவிர. இதுதான். இது ஒன்றுதான். இது மட்டுமேதான்.

'சர்தாம் போய்யா' என்று ஒரு பேச்சுவார்த்தை சமயத்தில் ஸ்பெயின் அதிகாரிகள் வெறுத்து எழுந்து போயே போய்விட்டார்கள். விளைவு, செப்டெம்பர் 23, 2006 அன்று அரித்சுலேகி (Aritxulegi) என்கிற இடத்தில் திடீரென்று ஒரு மேடை போட்டு மக்களைக் கூப்பிட்டு ஏழெட்டு இ.டி.ஏ. வீரர்கள் அவர்கள் முன் ஆயுதங்களுடன் தோன்றினார்கள்.

'என்ன நினைத்துக் கொண்டிருக்கிறார்கள் ஸ்பெயின் அரசாங்கத்தினர்? நாங்கள் போர் நிறுத்தம்தான் செய்திருக்கிறோம். ஆனால், இன்னும் ஆயுதங்களைத் தோளிலிருந்து இறக்கவில்லை. சுதந்திர பாஸ்க், சோஷலிச ஆட்சி என்கிற எங்கள் கனவு நனவாகும்வரை போராட்டத்திலிருந்து ஓய்ந்துவிடுவோம் என்று மட்டும் கனவு காணவேண்டாம். தூக்கிய ஆயுதத்தை இயக்குவதற்கு ரொம்ப நேரம் ஆகாது. பீ கேர்ஃபுல்.'

இந்தப் 'பொதுக்கூட்ட' அச்சுறுத்தலை சில பத்திரிகைகள் கவர் செய்திருந்தன. புகைப்படங்களுடன் கொட்டை எழுத்தில் செய்தியைப் பிரசுரித்திருந்தன. உடனடியாக கேபினட் கூட்டப்பட்டது. இ.டி.ஏ.வை நம்பி அமைதிப் பேச்சு நடத்துவது சரியா?

விவாதம் சூடு பிடித்தது. எதிர்க்கட்சிகள் கிழிகிழியென்று கிழித்துக்கொண்டிருந்தன. இ.டி.ஏ.வுக்கு இன்று பலமில்லை. அது ஒரு செத்த பாம்பு. எடுத்துச் சென்று போட்டுக் கொளுத்திவிட்டுத் திரும்ப அரசுக்குத் துப்பில்லையா? அவர்களிடம் இன்று ஆயுத பலம் இல்லை. ஆள் பலமும் குறைவு. முன்னைப்போல் அவர்கள் வெடிமருந்து தயாரிப்பதில்லை. வெளியிலிருந்துதான் வாங்குகிறார்கள் என்று கேள்விப்படுகிறோம். இருந்த ஆயுதச் சாலைகளையெல்லாம் அழித்தாகிவிட்டது. மிச்சமிருக்கும் சில பெருச்சாளிகளை ஒழித்துக்கட்ட வக்கில்லையா அரசுக்கு?

இதெல்லாம் நடந்துகொண்டிருந்தபோதே பிரான்ஸின் ஓர் ஆயுதப் பாதுகாப்புக் கிடங்கிலிருந்து ஓரிரவு முந்நூறு கையெறி குண்டுகளும் சில நூறு துப்பாக்கிகளும் காணாமல் போயின. கண்டிப்பாக அது இ.டி.ஏ.வின் வேலையாகத்தான் இருக்கும் என்று பிரான்ஸ் அரசு சொன்னது. ஸ்பெயினுக்கு நெருக்கடி அருகே வந்துவிட்ட மாதிரி தோன்றியது.

சொல்லிவைத்த மாதிரி நவம்பர் 4-ம் தேதி ஜுடாப் (Zutabe) என்கிற ஸ்பானிஷ் பத்திரிகை, இ.டி.ஏ.வின் அறிக்கை ஒன்றைப் பிரசுரித்தது. ஸ்பெயின் அரசாங்கம் அமைதிப் பேச்சுக்கு மதிப்புக்

கொடுத்து நடவடிக்கை எதுவும் மேற்கொள்ளாவிட்டால், இ.டி.ஏ. கனத்த மனத்துடன் தங்கள் பழைய பாதைக்கே திரும்ப வேண்டியிருக்கும் என்று எச்சரித்தது அந்த அறிக்கை.

இரு தரப்பும் மாற்றி மாற்றி அறிக்கைகள் விட்டுக்கொண்டார்கள். அமைதி, அமைதி என்று ஜபம் பண்ணிக்கொண்டே அதை எப்படிக் கழுத்தை நெரித்துக் கொல்லலாம் என்று யோசித்தார்கள். ஒருவழியாக, டிசம்பர் 30-ம் தேதி அது நடந்தது.

அமைதிப் பேச்செல்லாம் தங்களுக்கு ஆடம்பரம் என்று இ.டி.ஏ.வுக்குத் தோன்றிவிட்டது. சிலிர்த்துக் கொண்டு புறப்பட்டது ஒரு படை. ஒரு வேனில் முப்பத்தைந்து கிலோ வெடிமருந்தை ஏற்றிவிட்டு மூன்று வெவ்வேறு இடங்களுக்கு போன் செய்து வழக்கப்படி அறிவித்தார்கள். இ.டி.ஏ. அழைக்கிறது. வேன் வெடிக்கிறது.

அதற்குப் பிறகு பேச்சாவது வார்த்தையாவது?

அவ்வப்போது குண்டுகள். அவ்வப்போது துப்பாக்கிச் சூடுகள். இன்றும் தொடர்கிறது இ.டி.ஏ.வின் லீலைகள்.

ஸ்பெயினின் நிரந்தரத் தலைவலி என்று இ.டி.ஏ.வை வருணிப்பவர்கள் உண்டு. அவர்கள் இல்லாது போயிருந்தால் பாஸ்க் பழங்குடி மக்கள் இந்நேரம் அமெரிக்க செவ்விந்தியர்களைப் போல் அட்ரஸே இல்லாது போயிருப்பார்கள் என்று சொல்லுகிறவர்களும் உண்டு.

நியாயம் என்பது எப்போதும் இரண்டு வகைப்படும். என் நியாயம். உன் நியாயம். இடம், காலம், தேச வரையறைகளுக்கு அப்பாற்பட்டது இது. எங்கும் உண்டு இரண்டு நியாயங்கள். இரண்டையும் ஏற்கவும் இரண்டையும் எதிர்க்கவும் எப்போதும் உண்டு இரண்டுவிதக் கூட்டங்கள்.

நவீன உலகில் உண்மை என்பதைவிட, நியாயம் என்பதே அதிகம் பேசப்படுகிற விஷயமாக இருக்கிறபடியால், இந்த உரசல்களைத் தவிர்க்கமுடியாமல் போய்விடுகிறது.

அட நம்மூரில் ஒரு நடுவர் மன்றத் தீர்ப்புக்கு ஒரு மதிப்பு, மரியாதை தருகிற வழக்கம் இருக்கிறதா? எனக்கு என் நியாயம், உனக்கு உன் நியாயம். அவ்வளவுதான். இதனால்தான் பிரிவினைவாதிகளின் குரலும் குஸ்தியும் அவ்வப்போது தேய்வதுபோலத் தோன்றினாலும் இறந்துவிடாமல் எப்போதும் இருப்பதாகிறது.

நிகழும் 2007-ம் வருஷத்து ஜனவரி மாதம் வரைக்கும் இ.டி.ஏ. மூன்று மாதங்கள் அல்லது ஆறு மாதங்களுக்கொரு குண்டு வைத்துக்கொண்டுதான் இருக்கிறது. அறிக்கைகளில் அனல் பறந்துகொண்டுதான் இருக்கிறது. சில குண்டுகளுக்குச் சிலர் இறக்கிறார்கள். சில அறிக்கைகள் சிலருக்குக் கோபமூட்டுகின்றன.

மூட்டுவலியுடன் வாழப்பழகிவிட்ட வயோதிகக் கிழவி போல் இ.டி.ஏ.வைச் சகித்துக்கொள்ளப் பழகிவிட்டது ஸ்பெயின். இன்னும் ஓயாத புரட்சிக் கனவுகளுடன் அடுத்த குண்டை எங்கே வைக்கலாம் என்று ஆராய்ச்சி பண்ணிக்கொண்டிருக்கிறது இ.டி.ஏ.